<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.49/2022</u>

**<u>14.05.2026</u>**

**திரு .மணிமாறன் , த/பெ. கணேசன்**

PW : 1

2026 ஆம் ஆண்டு மே மாதம் 14 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் ஓட்டிச்சென்ற TN 50 AF 9960 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காகவும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இருந்தது தொலைந்துவிட்டது. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். தூக்கி எறியப்பட்டதில் அது கழன்றுவிட்டது.

விபத்தின் போது தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். அது நேர் சாலை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் எனக்கு பின்புறம் வந்தது என்றால் சரிதான். அந்த சாலையின் வலதுப்புறம் உள்ள எனது வீட்டிற்கு செல்வதற்காக பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல் சாலையில் மையப்பகுதிக்கு வந்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் 1 ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான 3 ம் எதிர்மனுதாரருக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளரையும்,

காப்பீட்டுதாரரையும் இவ்வழக்கில் சேர்க்கதாதல் அது குறைபாடு உடையது என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட சாதாரண காயம் என்றாலும், அது அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்றதால் குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல.

நான் தற்சமயம் வரை வெளிநோயாளியாக மருத்துவ சிகிச்சை பெறுவதாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னால் சரியாக பேச முடியவில்லை, வலதுப்புறம் இயக்கம் சரியாக இல்லை. நான் இருசக்கர வாகன பழுதுப்பார்க்கும் கடை வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதை நிருபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.14 11:00:20 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்